உயர் கல்வித் (இ2) துறை
கடித எண். 10809 / இ2 / 2013–1, நாள். 25.7.2013.

அனுப்புநர்
திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6.

031696

அம்மையீர்,

பொருள்: உதவிபெறும் கல்லூரி – முனைவர் ஆர்.எல்.இராம்நாத், மதுரை, சௌராஷ்டிரா கல்லூரியில் முதல்வராக பணிஓய்வு பெற்று, மீளப்பணியமர்வு திட்டத்தின்கீழ் 1.6.2013 முதல் 31.05.2015 முடிய இரண்டு வருடங்கள் நிர்வாக ஊதியத்தில் பணியாற்றுவதற்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பாக.

பார்வை:1. அரசு கடிதம் எண். 11954/இ2/2012–3, நாள்.18.10.2012.
2. அரசு கடிதம் எண். 6838/இ202013–1, நாள்.25.6.13.
3. அரசு கடிதம் எண்.8579/இ2/2013–1, நாள்..3.7.2013.
4. தங்களது கடித எண் 21969/ ஜி4/ 2013, நாள்.6.6.2013.

******

பார்வையில் காணும் அரசு கடிதங்கள் மற்றும் தங்களது கடிதம் ஆகியவற்றின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை 4 இல் காணும் தங்களது கடிதத்தில், 31–12–2012 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்ற முனைவர் ஆர்.எல்.இராம்நாத், என்பார் அக்கல்வி ஆண்டு இறுதி வரை மறுநியமன அடிப்படையில் 1.1.2013 முதல் 31.5.2013 வரை பணிபுரிந்துள்ளார் என்றும், அதன் பிறகு நிர்வாக ஊதியத்தில் 1.6.2013 முதல் 31.5.2015 முடிய முதல்வராக மீளப் பணியமர்வு திட்டத்தின் கீழ் சார்ந்த கல்லூரி நிர்வாகத்தின் ஒப்பந்த அடிப்படையில் நிர்வாக ஊதியத்தில் பணிபுரிய அரசின் அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசாணை (நிலை) எண்.350, உயர் கல்வி, நாள்.9.9.2009–இல் கூறப்பட்டுள்ள வழிபாட்டு நெறிமுறைகளின்படி ஆய்வு செய்யப்பட்டது. அவ்வாணையில் கல்லூரி ஆசிரியர்களின் பணி ஓய்வு 58 எனவும் பணி ஓய்விற்குப் பிறகு மறுநியமனம் வழங்கக் கூடாது என்பதினால், முனைவர் ஆர்.எல்.இராம்நாத், என்பார் பணிஓய்வுக்குப்பின், மீளப் பணியமர்வு திட்டத்தின் கீழ் 1.6.2013 முதல் 31.05.2015 முடிய மதுரை, சௌராஷ்டிரா கல்லூரியில் முதல்வராக சார்ந்த நிர்வாகத்தின் ஒப்பந்த அடிப்படையில் நிர்வாக ஊதியத்தில் பணியாற்றுவதற்கு ஒப்புதல் வழங்கக் கோரும் தங்களது கருத்துரு அரசால் நிராகரிக்கப்படுகிறது என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. இனிவருங்காலங்களில் இதுபோன்ற கருத்துருக்கள் மீது அரசின் ஆணை கோருவதை தவிர்க்குமாறும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

25/7/13

அரசு முதன்மைச் செயலாளருக்காக.